# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## August 10, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. சென்னை உயர் நீதிமன்றத்துக்குப் புதிதாக நியமிக்கப்பட்டுள்ள 15 நீதிபதிகள் பதவி ஏற்றுக்கொண்டனர்.

   i. இவர்களில் 5 பேருக்கு நிரந்தர நீதிபதிகளாகவும், 10 பேருக்கு கூடுதல் நீதிபதிகளாகவும் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மா திகாரி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

   ii. சென்னை உயர்நீதிமன்றத்தில் காலியாக உள்ள நீதிபதிகள் பணியிடங்களை நிரப்பும் வகையில் உச்சநீதிமன்ற கொலீஜியத்தின் பரிந்துரையை ஏற்று 15 பேரை நீதிபதிகளாக நியமித்து குடியரசுத் தலைவர் உத்தரவிட்டார். அதன்படி, புதிதாக நியமிக்கப்பட்டுள்ள 15 நீதிபதிகளுக்கான பதவி ஏற்பு விழா உயர்நீதிமன்ற வளாகத்தில் உள்ள கூட்டரங்கில் நடைபெற்றது.

   iii. புதிதாகப் பதவி ஏற்ற நீதிபதிகளை வரவேற்று தமிழக அரசின் தலைமை வழக்குரைஞர் விஜய் நாராயண் பேசியதாவது:

      - சென்னை உயர்நீதிமன்றத்துக்கு அனுமதிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை 75. தற்போது நியமிக்கப்பட்டுள்ள 15 பேருடன் சேர்த்து நீதிபதிகளின் எண்ணிக்கை 66-ஆக உயர்ந்திருக்கிறது. மீதமுள்ள 9 காலிப் பணியிடங்களையும் விரைவில் நிரப்பி, காலிப் பணியிடங்களே இல்லாத நிலையை உருவாக்க வேண்டும்.
      - மேலும், தற்போது நியமிக்கப்பட்டுள்ள மூன்று பெண் நீதிபதிகளுடன் சேர்த்து சென்னை உயர் நீதிமன்றத்தில் பெண் நீதிபதிகளின் எண்ணிக்கை 13-ஆக உயர்ந்துள்ளது. இதன்மூலம் நாட்டிலேயே அதிக பெண் நீதிபதிகளைக் கொண்ட உயர்நீதிமன்றமாக சென்னை உயர்நீதிமன்றம் விளங்குவது பெருமைக்குரியது என்றார்.

2. தமிழ்நாடு சட்ட ஆணையம் மறுசீரமைக்கப்பட்டு, அதன் புதிய தலைவராக மணிப்பூர் உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி டி.கிருஷ்ணகுமார் நியமிக்கப்பட்டுள்ளார்.

   i. இந்தச் சட்ட ஆணையத்தின் பதவிக் காலம் கடந்த ஜூன் 18-ஆம் தேதி

நிறைவடைந்தது. இதையடுத்து, தற்போது சட்ட ஆணையம் மறுசீரமைக்கப்பட்டு, தலைவர் மற்றும் முழுநேர, பகுதிநேர உறுப்பினர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

ii. மாநிலசட்ட ஆணையத்தின் தலைவராக டி.கிருஷ்ணகுமார் நியமிக்கப்பட்டுள்ளார். முழுநேர உறுப்பினர்களாக ஆர்.எம்.டி.டீக்கா ராமன், (சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி), டி.கே.ராமச்சந்திரன் (முன்னாள் கூடுதல் தலைமைச் செயலர்), ஏ. அருணகிரி (சட்டத் துறை முன்னாள் செயலர்), பகுதிநேர உறுப்பினர்கள் பி.மோகன்தாஸ் (முன்னாள் மாவட்ட நீதிபதி), ஆர்.கோவிந்தராஜன் (முன்னாள் மாவட்ட நீதிபதி) சட்டத் துறை செயலர் நிலையில் உள்ள அதிகாரி முழுநேர உறுப்பினர் செயலராகச் செயல்படுவார்.

iii. ஆணைய பணிகள்:

- நடைமுறையில் உள்ள சட்டங்களின் குறைபாடுகளை நீக்க பரிந்துரைத்தல், சமூக, பொருளாதார சட்ட நடவடிக்கைகளுக்கு பரிந்துரை வழங்குதல், மத்திய-மாநில உறவுகள், மாநிலங்களிடையேயான உறவுகள் தொடர்பான பரிந்துரைகள் அளித்தல், நீதித் துறை சீர்திருத்தங்களை விரைவுபடுத்த பரிந்துரைத்தல், தமிழ்நாட்டில் நடைமுறையில் உள்ள மத்திய மற்றும் மாநில சட்டங்களைச் சீரமைக்கும் பரிந்துரைகள் அளித்தல், தமிழ் நாட்டின் சட்டங்கள், விதிகளை பகுப்பாய்வு செய்து பரிந்துரைத்தல் ஆகியவை இந்த ஆணையத்தின் முக்கிய பணிகள் ஆகும்.
- தற்போதைய ஆணையத்தின் தலைவர், பகுதிநேர, முழுநேர உறுப்பினர்களின் பதவிக் காலம், பதவி யேற்கும் நாளில் இருந்து 3 ஆண்டுகள் ஆகும்.

3. கண்டலேறு அணை - ஆந்திர மாநிலம்

4. ஜப்பானின் நாகசாகி நகரம் மீது அமெரிக்கா நடத்திய அணுகுண்டு தாக்குதலின் 81-ஆவது நினைவு தினம் அனுசரிக்கப்பட்டது.

i. இதைத் தொடர்ந்து, அணுகுண்டுகள் எப்போதும் தீமை விளை விக்கக்கூடியது; அணுகுண்டுகளை வைத்திருக்கவோ, உற்பத்தி செய்யவோ மற்றும் அறிமுகப்படுத்தவோ கூடாது என்ற மூன்று கொள்கைகளையும்

ஜப்பான் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டும் என நாகசாகி மேயர் ஷிரோ சுசுகி வலியுறுத்தினார்.

ii. மேலும், அணு ஆயுதங்களை அதிகம் சார்ந்திருந்தால் அணு ஆயுதப் போர் வெடிக்கும் அபாயம் உண்டாகும் என பிற நாடுகள் புரிந்துகொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

iii. இரண்டாம் உலகப் போர் காலகட்டத்தில் 1945, ஆகஸ்ட் 9-ஆம் தேதி ஜப்பானின் நாகசாகி நகரம் மீது அமெரிக்கா அணுகுண்டு தாக்குதலை நடத்தியது. இதில் 70,000 பேர் உயிரிழந்தனர். முன்னதாக ஆகஸ்ட் 6-ஆம் தேதி ஹிரோசிமா நகரம் மீது நடத்தப்பட்ட அணுகுண்டு தாக்குதலில் 1.40 லட்சம் பேர் உயிரிழந்தனர். இதைத் தொடர்ந்து 1945, ஆகஸ்ட் 15-ஆம் தேதி ஜப்பான் சரணடைந்ததன் விளைவாக இரண்டாம் உலகப் போர் முடிவுக்கு வந்தது.

5. பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழுவின் (சிசிஇஏ) அனுமதி பெறுவதற்கான அந்நிய நேரடி முதலீடு (எஃப்டிஐ) உச்சவரம்பை ரூ.15,000 கோடியாக உயர்த்த மத்திய அரசு பரிசீலித்து வருகிறது.

i. முதலீடுகளை ஈர்க்கும் நோக்கில் தற்போது ரூ.5,000 கோடியாக உள்ள இந்த உச்சவரம்பை மத்திய அரசு உயர்த்தவுள்ளதாக் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

ii. சிசிஇஏ என்பது பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் செயல் படக்கூடிய உயர்நிலைக் குழுவாகும். இது உள்துறை அமைச்சர், நிதியமைச்சர் உள்ளிட்ட கேபினட் அமைச்சர்களை உள்ளடக்கியது.

iii. தற்போதைய விதிகளின்படி ரூ.5,000 கோடிக்கு மேல் இந்தியாவில் அந்நிய நேரடி முதலீடுகளை மேற்கொள்ள சிசிஇஏவிடம் ஒப்புதல் பெற வேண்டியது கட்டாயம். ரூ.5,000 கோடிக்கும் குறைவான முதலீடுகள் குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சகங்கள் முடிவெடுக்கின்றன.

iv. இந்த உச்சவரம்பு கடந்த 2015 நவம்பர் முதல் தொடர்ந்து வருகிறது.

v. இந்நிலையில், தற்போதைய பணவீக்கம், வணிகச் சூழலை கருத்தில் கொண்டு சிசிஇஏவிடம் ஒப்புதல் பெறுவதற்கான எஃப்டிஐ உச்சவரம்பை ரூ.5,000 கோடியில் இருந்து ரூ.15,000 கோடியாக உயர்த்துவது குறித்து மத்திய அரசு பரிசீலிப்பதாக தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

vi. 1.16 டிரில்லியன் டாலர் அந்நிய முதலீடு:

- முன்னதாக, துறை வாரியான செயலர்கள் ஆலோசனைக் கூட்டத்திலும் இதுதொடர்பாக ஆலோசிக்கப்பட்டதாகவும் தகவல்கள் வெளியாகின.
- அதேபோல் உற்பத்தி ரீதியாக ஏற்கெனவே அந்நிய நேரடி முதலீட்டுக்கு ஒப்புதல் பெற்ற நிறுவனங்களுக்கு விநியோகம் தொடர்பாக எஃப்டிஐ (மறைமுக எஃப்டிஐ) மேற்கொள்ள விலக்களிப்பது குறித்தும் மத்திய அரசு பரிசீலிக்கிறது.
- தற்போது அரசு ஒப்புதலின் கீழ் எஃப்டிஐ மேற்கொள்ள வேண்டிய துறைகள் மற்றும் இந்தியாவுடன் நில எல்லையை பகிரும் நாடுகளுக்கு மட்டும் மறைமுக எஃப்டிஐக்கு மத்திய அரசின் முன் அனுமதி பெற வேண்டியது கட்டாயம்.
- 2000, ஏப்ரல் முதல் 2026 ஏப்ரல் வரையிலான காலகட்டத்தில் ஒட்டுமொத்தமாக 1.16 டிரில்லியன் டாலர் அந்நிய நேரடி முதலீடுகளை இந்தியா ஈர்த்துள்ளது.
- மோரீஷஸ், சிங்கப்பூர், அமெரிக்கா, நெதர்லாந்து, ஜப்பான், பிரிட்டன் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகள் இந்தியாவில் அதிக முதலீடுகளை மேற்கொள்கின்றன.

6. அமலாக்கத் துறை இயக்குநர் ராகுல் நவீனின் பதவிக் காலத்தை ஓராண்டுக்கு மத்திய அரசு நீட்டித்துள்ளது.

   i. கடந்த 1993-ஆம் ஆண்டு பிரிவு இந்திய வருவாய் பணி அதிகாரியான ராகுல் நவீனுக்கு வரி விதிப்பு மற்றும் நிதி முறைகேடு விசாரணைகளில் 30 ஆண்டுகால அனுபவம் உள்ளது.
   ii. கடந்த 2024-ஆம் ஆண்டு ஆக.14 முதல் அமலாக்கத் துறை இயக்குநராக அவர் பணியாற்றி வருகிறார். இந்நிலையில், அவரின் பதவிக்காலத்தை அடுத்த ஆண்டு ஆக.13 வரை நீட்டித்து மத்திய அமைச்சரவையின் நியமனங்கள் குழு ஒப்புதல் அளித்துள்ளது.
   iii. அமலாக்கத் துறை இயக்குநராக ஒருவரை விதிமுறைப்படி 2 ஆண்டுகளுக்கு நியமிக்கலாம். அதன் பின்னர், தலா ஓராண்டு வீதம் மூன்று முறை அவரின் பதவிக்காலத்தை நீட்டிக்கலாம்.